மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்று சொல்கிறேன், நீங்கள் விதியை மீறாதீர்கள். எதிர்கட்சித் துணைத் தலைவராக இருந்துகொண்டு நீங்கள் விதியை மீறாதீர்கள். No. (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகளைச் சொல்லக்கூடாது. முன்னாள் முதலமைச்சர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள், அந்தச் சாலை ஆண்டிப்பட்டி தொகுதியிலே வருகிறது என்ற காரணத்தால்தான் கிடப்பில் போட்டீர்கள் என்று சொன்னால், அது குற்றச்சாட்டுதான். துணைக் கேள்வி என்பது, கேட்கப்பட்ட மூலக் கேள்வியினுடைய பதிலிலிருந்து ஒரு விளக்கத்தைப் பெறலாமே தவிர, குற்றச்சாட்டை புதிய கேள்வியில் கேட்கக் கூடாது என்பது மரபு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்விக்குத் துணைக் கேள்வி கேட்க அனுமதிக்கக்கூடாது என்று விதியில் இருக்கிறது. நீங்கள் திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டேயிருந்தால் என்ன அர்த்தம்? நீங்களே விதியை மீறலாமா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வந்த பிறகுதான் இதற்கான கருத்துரு அனுப்பப்பட்டதாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. கடந்த 2002 ஆம் ஆண்டிலேயே இதற்கான கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. P.M.G.S.Y. என்ற திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கோப்புகளைக் கொஞ்சம் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

208—

மேம்பாலம்

***1393—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2008 மே 6]

(அ) அம்பத்தூர் பழைய நகரப் பேருந்து நிலையம்-எம்.டி.எச். சாலை வழியாக பாடி வரையிலான நெடுஞ்சாலையில் இரயில் கடக்கும் இடத்தில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?.

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன்.

முற்பகல் 10-15

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் எம்.டி.எச். சாலையிலிருந்து பூந்தமல்லி நெடுஞ்சாலை வரைக்கும் செல்கின்ற அத்திப்பட்டு-வானகரம் சாலையை அகலப்படுத்தி நான்கு வழிப் பாதையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலை வானகரம்-அம்பத்தூர் சாலை. இந்தச் சாலை சுமார் 6.4 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இந்தச் சாலையை கடந்த ஆறு மாத காலத்திற்கு முன்பு நான் நேரடியாக ஆய்வு செய்திருக்கிறேன். மிக அதிகமான போக்குவரத்து உள்ள சாலை. இந்தச் சாலை சுமார் ஒரு கிலோ மீட்டர் அளவிற்கு ஒரு வழிச்சாலையாக இருந்தது. இந்த நிதி ஆண்டிலே ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுமார் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மீதமுள்ள ஒருவழிச் சாலையையும் இருவழிச் சாலையாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மேலும், வாகனப் போக்குவரத்திற்கேற்ப அதை நான்கு வழிச் சாலையாகக்கூட மாற்றுவது குறித்தும் அரசின் பரிசீலனையில் உள்ளது.